தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

20.11.2012 P.M

21.11.2012 A.M

## எஃப் .டி.ஐ.யால் விவசாயிகளுக்கு நன்மை : சரத் பவார்



சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டால் (எப்.டி.ஐ.) விவசாயிகளும், நுகர்வோர்களும் பயன்பெறுவர் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

லூதியானாவில் உள்ள பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் சரத் பவார் பங்கேற்றார். அப்போது அவர் கூறியது:÷""சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதால், சிறிய கடைகளை நடத்தி வருவோருக்கும், வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை. விவசாயிகள், நுகர்வோர்களின் நலனைக் கருதியே, அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபில் அதிக பரப்பளவில் எண்ணெய் வித்துப் பயிர்களையும், பயறு வகைப் பயிர்களையும் சாகுபடி செய்ய விவசாயிகளை மாநில அரசு ஊக்கப்படுத்த வேண்டும். உத்தரப் பிரதேசம், பிகார், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் நெல் உற்பத்தியை பெருக்கவும், நாட்டில் சேமிப்புக்

கிடங்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது" என்றார் சரத் பவார்.

20th nov 2012 P.M

**நவ.23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பர் 23) காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண்மை தொடர்புடைய கடனுதவிகள், வேளாண் மேம்பாட்டுக்கான திட்டங்கள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமோ தெரிவிக்கலாம் என ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்குப் பயிற்சி**

பெரம்பலூர் அருகே வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பருத்தி விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைப் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய பருத்தித் திட்ட அலுவலர் ப. சரவணன் நோய் குறித்தும் விளக்கினார். கூடுதல் விவரங்களுக்கு ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தைத் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார்.

இதில், வேப்பந்தட்டை, தொண்டப்பாடி உள்ளிட்ட கிராம முன்னோடி பருத்தி விவசாயிகள் கலந்து கொண்டனர். திட்ட களப்பணிளாளர் ந. சுத்தாங்காத்து நன்றி கூறினார்.

**திருவாரூர் மாவட்டத்தில் ரூ. 90 கோடி பயிர்க் கடன்**

திருவாரூர் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளுக்கு ரூ. 90 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர். காமராஜ்.

திருவாரூர் மாவட்டம், மாப்பிள்ளைக் குப்பத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 59-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் ரூ. 21.40 லட்சத்தில் நலத் திட்ட உதவிகள், சிறந்த

கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வென்றோருக்கு பரிசு வழங்கிய அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் 2012-2013 ஆம் ஆண்டுக்கு கூட்டுறவு சங்கம் மூலம் 32,763 விவசாயிகளுக்கு ரூ. 90 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. வட்டியில்லா பயிர்க் கடன் ரூ. 110 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 18,802 விவசாயிகளுக்கு இதுவரை ரூ. 63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

13,038 மெட்ரிக் டன் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதை வழங்கப்பட்டுள்ளது.

பொதுவிநியோக கடைகள் மூலம் 3,36,219 குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசி உள்ளிட்ட மளிகைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கூட்டுறவுததுறை மூலம் அரசு அறிவிக்கும் சலுகைகளைப் பெற்று விவசாயிகள் மற்றும் மக்கள் பயன்பெற்று பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றார் அவர்.

மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, திருவாரூர் மண்டல இணைப்பதிவாளர் சந்திரசேகரன், கூட்டுறவு சங்க தனி அலுவலர் சௌந்தரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## எண்டோசல்ஃபானை 2 ஆண்டுகள் அனுமதிக்க பரிந்துரை

எண்டோசல்ஃபான் பூச்சிக்கொல்லி மருந்தை அடுத்த 2 ஆண்டுகளுக்கு இந்தியாவில் அனுமதிக்கலாம் என்று என்று உச்ச நீதிமன்றத்தில் நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

எண்டோசல்ஃபானை இந்தியாவில் தடை செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது தொடர்பாக ஆய்வு செய்ய நிபுணர் குழுவை நியமித்தது. 2011 மே மாதம் எண்டோசல்பானுக்கு தாற்காலிகத் தடையும் விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆய்வு செய்த நிபுணர் குழு, அடுத்த 2 ஆண்டுகளுக்கு எண்டோசல்ஃபானை பயன்படுத்த அனுமதிக்கலாம்.

மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இருப்பு வைத்துள்ள இந்த பூச்சி மருந்து, அதனைத் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களை முற்றிலுமாக தீர்த்துக் கொள்ள இந்த கால அவகாசத்தை வழங்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது. இதனை உச்ச நீதிமன்றம் நவம்பர் 29ஆம் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இருக்கிறது.

## மழை இல்லையேல் பிசானமும் பிசுபிசுக்கும் !

திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான சாகுபடி முழுமை அடைய மழை பெய்ய வேண்டிய கட்டாயம் உருவாகியிருக்கிறது. தற்போது அணைகளிலும் குளங்களிலும் உள்ள தண்ணீர் நாற்றுப் பாவுதலுக்கும், நடுதலுக்கும் மட்டுமே போதுமானதாக இருப்பதால் விவசாயிகள் மழையை வேண்டி நிற்கின்றனர்.

நெல் விவசாயத்துக்கு பெயர்போனது திருநெல்வேலி மாவட்டம். இதனால்தான் இம்மாவட்டத்தின் பெயருக்குள்ளேயே நெல் இடம் பெற்றிருக்கிறது என்று மூத்தோர்கள் தெரிவிக்கின்றனர். அந்த அளவுக்கு நெல் உற்பத்தியில் சிறப்புமிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது விவசாயம் பெரும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு அருகிவரும் விவசாய நிலங்கள், விவசாய இடுபொருள்களின் விலை உயர்வு என்றெல்லாம் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பருவமழை பொய்த்துப்போவதே முக்கிய காரணமாக இருக்கிறது.

இந்த மாவட்டத்தில் பருவமழை போதிய அளவுக்கு பெய்யவில்லை என்பதால் 2009-ம் ஆண்டிலிருந்து கார் சாகுபடி கேள்விக்குறியானது. இவ்வாண்டு 19 ஆயிரம் ஹெக்டேரில் கார் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் வறட்சியால் 1637 ஹெக்டேரில் மட்டுமே நெல் விவசாயம் நடைபெற்றதாக வேளாண்மைத் துறை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் மாவட்டத்தில் 13849 ஹெக்டேரில் கார் சாகுபடி நடந்திருக்கிறது. இவ்வாறு கார் சாகுபடி கைவிரித்துவிட்ட நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் பிசான சாகுபடியும் விவசாயிகளுக்கு கை கொடுக்கவில்லை. இவ்வாண்டு 64900 ஹெக்டேரில் பிசான சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த இலக்கை எட்டுவதற்கு சாத்தியக்கூறுகளே இல்லை என்று விவசாயப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். தற்போது அணைகளிலும், குளங்களிலும் உள்ள நீரைக் கொண்டு நாற்றுப்பாவுதல், நாற்றுநடுதல் என்று 30 நாள்களுக்கு மட்டும் பயிரை காப்பாற்றலாம். மேலும் 90 நாள்களுக்கு தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும்? மழையைத்தான் விவசாயி நம்பியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

மாவட்டத்தில் விவசாயத்துக்கு ஆதாரமான 143 அடி நீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணையில்

நீர்மட்டம் தற்போது 75.65 அடியாக உள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அணையின் நீர்மட்டம் 104 அடியாக இருந்தது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் தற்போது 83.82 அடியாக உள்ளது. கடந்த ஆண்டில் 117 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணையில் தற்போது 63.15 அடியாக நீர்மட்டம் உள்ளது. கடந்த ஆண்டில் 57 அடியாக இருந்தது. மற்ற அணைகளின் நீர்மட்டமும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது குறைவாகவே இருக்கிறது. ஒட்டுமொத்தமாக அணைகளில் தற்போது 30 சதவிகிதம் மட்டுமே நீர் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் 40 சதவிகிதம் நீர் இருப்பு இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுபோல் குளங்களில் நீர் இருப்பும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. மாவட்டத்தில் மொத்தமுள்ள 2449 குளங்களில் (மானாவாரி- 1528, கால்வரத்து- 921) தற்போது 2297 குளங்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டிருக்கிறது. 152 குளங்களில் (மானாவாரி- 25, கால்வரத்து- 127) 1 மாதத்துக்கு விவசாயத்துக்குப் பயன்படுத்த மட்டுமே தண்ணீர் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் சமீபத்தில் பெய்த மழையை நம்பியும், வரும் நாள்களில் மழை பெய்யக்கூடும் என்ற நம்பிக்கையிலும் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாய நிலங்களில் பிசான சாகுபடிப் பணிகளை விவசாயிகள் தொடங்கியிருக்கின்றனர். நாங்குனேரி வட்டாரத்தில் இப்பருவத்துக்கு மட்டும் 156 டன் விதை நெல் வாங்கப்பட்டு சாகுபடி பணிகள் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பகுதியில் முக்கிய குளங்களான திருக்குறுங்குடி, களக்காடு குளங்களில் போதிய தண்ணீர் இல்லை. அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீரும் 30 நாள்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். எனவே மழைதான் காப்பாற்ற வேண்டும் என்கிறார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் பி.பெரும்படையார்.

கார் பருவத்தில் விவசாயம் பொய்த்ததால் விவசாயிகள் நொடிந்து போயிருக்கிறார்கள். தற்போது கடன் வாங்கி இயற்கையை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாவட்டத்தில் நெல் விவசாயத்தை காப்பாற்ற அரசும் உரிய அக்கறை செலுத்த வேண்டும் என்று மேலும் அவர் கூறினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான சாகுபடிக்காக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் பாளையங்கால்வாய் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று சேரவில்லை. இதனால் இங்கெல்லாம் விவசாய பணிகள் சரிவர தொடங்கப்படவில்லை. தற்போது மழையும் பொய்த்திருப்பதால் பிசான சாகுபடியில் இறங்க விவசாயிகள் தயங்குகின்றனர். அணை நீரைக் கொண்டு நடவு செய்துவிட்டு பயிரைக் காப்பாற்ற படாதபாடு படவேண்டியிருக்கும் என்று இப்பகுதி விவசாயிகள் கருதுகின்றனர். மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்திருந்த நிலையில் தற்போது வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவுக்கு பெய்யவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் மட்டும் மாவட்டத்தில் 283.35 மி.மீ. மழை பெய்திருக்கிறது. ஆனால் இவ்வாண்டு நவம்பர் 19-ம் தேதி வரையில் வெறும் 71.17 மி.மீ. மழையே பெய்திருக்கிறது. கடந்த சில நாள்களாக மாவட்டத்தில் பனிப்பொழிவு அதிகரித்துள்ள

நிலையில் மழை பெய்யும் வாய்ப்பு குறைவு என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். புயல் மழையை நம்பியே சாகுபடியில் இறங்கியிருப்பதாக சிலர் தெரிவித்தனர்.

சில ஆண்டுகளாகவே மாவட்டத்தில் கார் மற்றும் பிசான சாகுபடிகள் விவசாயிகளை ஏமாற்றியிருக்கிறது. இதனால் மாவட்டத்தில் நெல் உற்பத்தி பெருமளவுக்கு குறைந்துவிட்டது. இதே நிலை நீடித்தால் நெல் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் மாவட்டத்தில் சமூகப் பிரச்னைகளும் தலையெடுக்கும் என்பது சமூக ஆர்வலர்கள் கவலை.

அணைகளில் இருந்து

தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் பாளையங்கால்வாய் கடைமடைப் பகுதிகளுக்கு

தண்ணீர் சென்று சேரவில்லை. இதனால் விவசாய பணிகள்

சரிவர தொடங்கப்படவில்லை.

மழையும் பொய்த்திருப்பதால் பிசான சாகுபடியில் இறங்க விவசாயிகள் தயங்குகின்றனர். அணை நீரைக் கொண்டு

நடவு செய்துவிட்டு பயிரைக் காப்பாற்ற படாதபாடு

படவேண்டியிருக்கும் என்று

இப்பகுதி விவசாயிகள்

கருதுகின்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.11.2012 A.M**

**விவசாய மலர்**

## கரும்புக்கு அரசுவிலை நிர்ணயம் மறு பரிசீலனைக்கு வலியுறுத்தல்

தஞ்சாவூர்: "கரும்புக்கு டன் ஒன்றுக்கு, 2,350 ரூபாய் விலை நிர்ணயித்துள்ளது குறித்து, தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்' என, குருங்குளம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, தஞ்சை மாவட்டத்திலுள்ள குருங்குளம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தலைவர் ராமநாதன், செயலாளர் கோவிந்தராஜ், கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தலைவர் ராமசாமி ஆகியோர் கூறியதாவது:

2012-13ம் ஆண்டுக்கு, கரும்புக்கு நிர்ணய விலையை அரசு அறிவிக்கக்கோரி, தஞ்சையிலுள்ள குருங்குளம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்பட்டது. இதில், கரும்பு டன் ஒன்றுக்கு, நான்காயிரம் ரூபாய் விலை நிர்ணயிக்குமாறு அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த, 19ம் தேதியன்று, கரும்புக்கு டன் ஒன்றுக்கு, 2,350 ரூபாய் விலை நிர்ணயித்து முதல்வர் அறிவித்துள்ளார். தற்போது உரவிலை டி.ஏ.பி., 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு, 1,250 ரூபாய் விற்கின்றது. இதேபோல, மற்ற உரங்களும், மூன்று மடங்கு விலையுயர்ந்து விட்டது.போதிய மின்சாரமும் இல்லை.

இத்தகைய சூழலில் கரும்பு டன் ஒன்றுக்கு, 2,350 ரூபாய் விலை அறிவித்திருப்பது, விவசாயிகள் இடையே கடும் ஏமாற்றமளிக்கிறது. எனவே, இம்முடிவை மறுபரிசீலனை செய்து, டன் ஒன்றுக்கு, நான்காயிரம் ரூபாய் அறிவிக்க வேண்டும்.

இதேபோல, பிரதமரின் பொருளாதார ஆலோசகர் ரெங்கராஜன் குழு, மத்திய அரசுக்கு கரும்பு விலை நிர்ணயம் குறித்து ஆலோசனையை வழங்கியுள்ளது. இந்த ஆலோசனை தனியார் ஆலைகளுக்கு சாதகமாக அமைந்துள்ளது. எனவே, விவசாயிகள் நலனுக்கு எதிரான இந்த குழுவின் ஆலோசனையை மத்திய அரசு நடைமுறைப்படுத்தக்கூடாது என, மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு நடந்தது.

மாநில தலைவர் பாலகிருஷ்ணன், பொது செயலாளர் சண்முகம், பாலபாரதி எம்.எல்.ஏ.,மாவட்ட

தலைவர் ராஜரத்தினம், ஒன்றிய செயலாளர் ராஜூ, மாநில துணை செயலாளர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் சச்சிதானந்தம், மாவட்ட தலைவர் வசந்தாமணி, பொருளாளர் அஜாய்கோஷ், துணை தலைவர் பழனிவேல் உட்பட பலர் பங்கேற்றனர். விவசாயிகளுக்கு ஆறுமணிநேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கம் சார்பில் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடந்தது

## ஏலக்காய் சாகுபடியில் சரிவு கவலையில் விவசாயிகள்

கம்பம்:ஏலக்காய் சாகுபடியில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஏலக்காய் சாகுபடி இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்படுகிறது.

ஜனவரி முதல் மார்ச் வரையும், ஜூன் முதல் ஆகஸ்ட் வரையும் நல்ல மழை இருக்க வேண்டும். அப்போது தான் செடியில் மகசூல் கூடுதலாக கிடைக்கும்.

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரை மழை கிடைக்கவில்லை. சீசனிலும் மழை இல்லை. இதனால் ஏலச் செடிகளில் காய் பிடிப்பு குறைந்தது.

ஏலக்காயை பொருத்தவரை ஆறு எடுப்பு எடுப்பார்கள். ஒவ்வொரு எடுப்பிற்கும் 45 முதல் 50 நாட்கள் இடைவெளி இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் வரை எடுப்பு இருக்கும். செடிகளில் சிம்பு அடித்துள்ளதால், இந்த ஆண்டு வரும் டிசம்பர் மாதத்துடன் காய் எடுப்பு முடிவிற்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. சரங்களில் காய் இல்லை. இதனால், ஏல விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

அடுத்து அடித்துள்ள சிம்பில் இருந்து காய் வர 105 நாட்களாகும். இதனால், ஏலக்காய் சாகுபடியில் இந்த ஆண்டு கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதே சமயம், தற்போது வரும் காய்க்கு நல்ல விலை கிடைக்கும் என்று மார்க்கெட்டிங் ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர். சீதோஷ்ண நிலை மாற்றமே, இந்த நிலைக்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

## விவசாய சங்க செயற்குழு கூட்டம்

சங்கரன்கோவில்:கோ.மருதப்பபுரத்தில் விவசாய சங்க செயற்குழு கூட்டம் நடந்தது.சங்கரன்கோவில் தாலுகாவில் உள்ள கோ.மருதப்பபுரத்தில் விவசாய சங்க செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் மாடசாமி தலைமையில் நடந்தது. குருசாமி, ரவிச்சந்திரன், ராமசுப்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வரதராஜன் வரவேற்று பேசினார். மேலநீலிதநல்லூர் ஒன்றிய தலைவர் ராமலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் சிங்கக்கோனேந்தல் கண்மாயில் மறுகால் தண்ணீர் செல்லும் கால்வாயில் கண்பாலம் அமைக்க வேண்டும். கே.ரெட்டியபட்டியில் இருந்து கோ.மருதப்பபுரம் செல்லும் சாலையை சீரமைக்க வேண்டும். கோ.மருதப்பபுரம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தகுதி உள்ளவர்களுக்கு உடனடியாக அட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சங்கரன்கோவில்

தாலுகாவில் உள்ள அனைத்து உரக்கடைகளிலும் உர மூடைகளுக்கு விலைப்பட்டியல் வைக்காமல் அதிக விலையில் விற்பனை செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம்**

நான்குநேரி:நான்குநேரி யூனியன் உன்னங்குளத்தில் திருந்திய நெல் சாகுபடி செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.உன்னங்குளம் கிராமத்தில் விவசாயி கணேசன் வயலில் நடந்த செயல் விளக்க முகாமில் வேளாண்மை உதவி இயக்குனர் முருகேஷ், வேளாண்மை அலுவலர் அலாய்ஸ் ராஜன், அட்மா தொழில்நுட்ப வட்டார மேலாளர் செல்வராணி, தொழில்நுட்ப அறிஞர்கள், வானமாமலை, உய்க்காட்டதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.இதில் உன்னங்குளம், அம்பலம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் சாந்தி செய்திருந்தார்.

**விவசாயிகள் வருவாய் 3 மடங்கு உயர வேண்டும்**

தூத்துக்குடி:விவசாயிகள் வருவாய் 3 மடங்கு உயர வேண்டும். விவசாய உற்பத்தி 2 மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இதனை தாரக மந்திரமாக கொண்டு முதல்வர் ஜெ.,திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மை திட்டங்களை ஆய்வு செய்த வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார்.தூத்துக்குடி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் நேற்று வந்தார். முதலில் எப்போதும்வென்றான் அருகே ஜெகவீரபாண்டியபுரத்தில் மானாவாரியில் சிறுதானிய ஊக்குவிப்பு மூலம் ஊட்டசத்து பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 200 ஹெக்டேர் பரப்பில் வீரிய கம்பு ஒட்டுரகம் பயிர் செய்யப்பட்டுள்ளது.இந்த பயிர்களை வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செல்லப்பாண்டியன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தூத்துக்குடி மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தி முன்பை விட குறைந்து வருகிறது.இதனால் இதன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை, உரம் உள்ளிட்ட பொருட்களை வழங்கி இதன் உற்பத்தியை அதிகரிக்க செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகளும் தற்போது ஆர்வமாக முன் வந்து கொண்டிருப்பதாக தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ், தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் மதியழகன், வேளாண்மை துணை இயக்குனர்கள் சீனிவாசன், குருமூர்த்தி ஆகியோர் அமைச்சரிடம் தெரிவித்தனர். சிறுதானிய உற்பத்தி ஏன் இந்த மாவட்டத்தில் குறைந்தது என்று அமைச்சர் கேட்க, போதிய அளவிற்கு விவசாயிகளுக்கு லாபம் கிடைக்காததால் அவர்கள்

இதனை பயிரிடுவதை தவிர்த்தனர். தற்போது அரசு அதிக உதவி செய்வதால் விவசாயிகள் மீண்டும் ஆர்வமாக சிறுதானியங்கள் பயிரிடுகின்றனர் என்று இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தெரிவித்தார். விவசாயிகளும் வேளாண்மைத்துறை சார்பில் நல்ல உதவிகள் வழங்கப்படுவதாக அமைச்சரிடம் திருப்தி தெரிவித்தனர்.கலெக்டர் ஆஷீஷ்குமார், பி.ஆர்.ஓ தமிழ் இனியன், ஏ.பி.ஆர்.ஓ குமார், வேளாண் விற்பனைக்குழு தனி அதிகாரி பாலசிங், அதிமுக நிர்வாகி மூர்த்தி, துணைமேயர் சேவியர், தொழிற்சங்க நிர்வாகிகள் அருணாசலம், சங்கர், சண்முகராஜ், மீனாட்சிசுந்தரம், மாவட்ட கவுன்சிலர் திருப்பாற்கடல், ஓட்டப்பிடாரம் சேர்மன் காந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். பின்னர் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கோடாங்கிப்பட்டி கிராமத்தில் தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு கருவிகள், இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செல்லப்பாண்டியன் பேசியதாவது; கடந்த திமுக ஆட்சி காலத்தில் இரண்டு முறை பத்து ஆண்டுகள் வேளாண்மைத்துறை அமைச்சராக வீரபாண்டி ஆறுமுகம் இருந்தார். ஆனால் ஒருமுறை கூட இந்த பகுதிக்கு வந்தது கிடையாது.ஆனால் முதல்வர் ஜெ.,ஆட்சியில் வேளாண்மைத்துறை அமைச்சர் உடல்நலம் குன்றிய நிலையிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளை தீர்க்க வேண்டும். அவர்களுக்கு பல்வேறு பயனுள்ள திட்டங்களை வழங்க வேண்டும் என்பதற்காக வந்துள்ளார். இன்றும் தூத்துக்குடியில் இருக்கிறார். விவசாயிகள் எந்த குறைகளையும் அவரிடம் தெரிவிக்கலாம். எந்த ஆட்சியிலும் செய்யாத சாதனைகளை முதல்வர் ஜெ.,விவசாயிகள் நன்மைக்காக செய்து கொண்டிருக்கிறார். இவ்வாறு செல்லப்பாண்டியன் தெரிவித்தார். விவசாயிகளுக்கு மருந்து அடிக்கும் கருவி உள்ளிட்ட மானிய விலையில் பொருட்களை வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது;
முதல்வர் ஜெ.,வேளாண்மைத்துறைக்கும், விவசாயிக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அதிக நிதி ஒதுக்கீட்டை இந்த துறைக்கு அளித்துள்ளார். அதன் மூலம் எண்ணற்ற திட்டங்கள் விவசாயிகளின் நன்மைக்கு வழங்கப்படுகிறது.விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர வேண்டும் என்கிற ஒரே குறிக்கோளை மையமாக கொண்டு முதல்வர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து முன்பு அதிகமான வாழைக்காய் மற்றும் வாழை இலை ஏற்றுமதி பிற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது பல்வேறு மாவட்டங்களில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இருப்பினும் இந்த பயிருக்கு முன்னோடி மாவட்டமாக தூத்துக்குடி தான் விளங்கி கொண்டிருக்கிறது. கடந்த திமுக ஆட்சியில் வேளாண்மைத்துறையில் விவசாயிகளுக்கு என்று எந்த திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. உரம், பூச்சிமருந்துகள் கூட மானிய விலையில் வழங்கப்படவில்லை. ஆனால் முதல்வர் ஜெ.,அனைத்து ஊராட்சிகளிலும்

உழவர் பெருவிழா நடத்த உத்தரவிட்டு வேளாண்மைத்துறையில் விவசாயிகளுக்கு என்னென்ன திட்டங்கள் உள்ளது, அதில் அரசு மானியம் எவ்வளவு, பயிர்களுக்கு எந்த நேரத்தில் மருந்து அடிக்க வேண்டும் உள்ளிட்ட அனைத்து தொழில் நுட்பங்கள் அடங்கிய கையேட்டை வழங்கினார்.

இந்த கையேடு விவசாயிகளுக்கு பொக்கிஷமாக தற்போது இருந்து கொண்டிருக்கிறது. இந்த கையேட்டில் அனைத்து விபரங்களும் உள்ளது. விவசாயிகளின் வருவாய் 3 மடங்கு உயர வேண்டும். விவசாய உற்பத்தி 2 மடங்கு உயர வேண்டும். இதுவே முதல்வர் ஜெ.,யின் விருப்பமாகும். இதனையே தாரக மந்திரமாக கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. அரசு தெரிவித்தவற்றை முழுமையாக பாலோப் செய்தால் போதும் விவசாயிகளுக்கு விவசாயத்தில் அதிக லாபம் நிச்சயமாக கிடைக்கும்.ஆள் பற்றாக்குறை இருப்பதால் வேளாண்மைத்துறையில் இயந்திரமயமாக்குதல் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து புதிய கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதனை பெற முடியாதவர்களுக்கு குறைந்த வாடகையில் கருவிகளும் வழங்கப்படுகிறது.ஒரு ஹெக்டேர் உளுந்து பயிரிட அரசு 2 ஆயிரத்து 800 ரூபாய் வரை மானியம் வழங்குகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 700 ஹெக்டேர் பரப்பில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் இவை அதிகரிக்கப்படும். இவ்வாறு அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார்.

**ஒரு கட்டு முருங்கை காய் ரூ.100 க.பரமத்தி விவசாயிகள் மகிழ்ச்சி**

க.பரமத்தி: வாரச்சந்தையில் ஒரு கட்டு முருங்கைக்காய், 100 ரூபாய்க்கு விற்றதால், க.பரமத்தி மற்றும் சுற்றுப்புற பகுதிச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

முருங்கைக்காய் மனித வாழ்வில் உணவில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இவை நார்சத்து மிகுந்துள்ளதால், மக்கள் சமைத்து விரும்பி உண்ணுகின்றனர். இவை, கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி உள்ளிட்ட, 100க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் விவசாயிகளின் ஜீவனமாக விளங்கி வருகிறது. விவசாயிகளின் ஜீவனமாக உள்ள முருங்கைக்காய் பச்சைரூல், நெல்ரூல், செடி முருங்கை மற்றும் மர முருங்கை என பல்வேறு வகையில் விளைகிறது. இப்பகுதியில் விளைவிக்கப்படும் முருங்கைக்காய், 25 காய்கள் கொண்ட ஒரு கட்டின் விலை விளைச்சல் காலத்தில், ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று நடந்த க.பரமத்தி வாரச்சந்தையில் ஒரு கட்டு முருங்கைக்காய், 100 ரூபாய்க்கு விற்பனையானது. இதை வாங்க வெளியூரிலிருந்து, நூற்றுக்கணக்கான வியாபாரிகள் சந்தைக்கு வருகின்றனர்.

இப்பகுதியில் கொள்முதல் செய்யும் முருங்கைக்காய் விஜயவாடா, ஜெய்ப்பூர், சென்னை, மைசூர், பெங்களூர் உள்ளிட்ட பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, இதன்மூலம் பல லட்சம் ரூபாய் வருவாயை விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

முருங்கக்காய்க்கு அதிகவிலை கிடைப்பது குறித்து வியாபாரிகள் கூறுகையில்,""கரூர்

மாவட்டத்திலுள்ள அரவக்குறிச்சி மற்றும் பரமத்தி பகுதியில் விளையும் காய்கள் ருசியாகவும், திடமாகவும் உள்ளதால், வெளிமாநிலங்களில் கிராக்கி அதிகமாக உள்ளது. தற்போது விளைச்சல் குறைவால், ஒரு கட்டு முருங்கைக்காயை, 100 ரூபாய் கொடுத்து வாங்கி ஏற்றுமதி செய்யும் போது, வியாபாரிகள் நஷ்டம் அடைகின்றனர். சீஸன் காலத்தில் மட்டுமே சம்பாதிக்க முடியும்," என்றனர்.

**கிணற்று பாச ன வாழைகள் வறட்சி பாதிப்பில் தப்பியது**

மேட்டூர்: கொளத்தூர் ஒன்றியத்தில் வறட்சியால் வாழைகள் கருகிய நிலையில், கிணற்று பாசனம் மூலம் சாகுபடி செய்த வாழைகள் மட்டுமே தப்பியுள்ளன.

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், பண்ணவாடி, செட்டியூர், கண்ணாமூச்சி, தார்க்காடு, மூலக்கடை உள்ளிட்ட பகுதியில், ஆண்டுதோறும், ஏழு லட்சம் ஏக்கரில் கதலி, ரஸ்தாளி ரக வாழைகளை, விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.

கொளத்தூர் ஒன்றியத்தில், ஏரி பாசனம் குறைவு என்பதால், போர்வெல் மற்றும் கிணற்று பாசனத்தில், விவசாயிகள் வாழை சாகுபடி செய்தனர். நடப்பாண்டு, கொளத்தூர் பகுதியில் பெரும்பாலான இடங்களில் நிலத்தடி நீர்மட்டம், 900 அடிக்கு கீழே சென்று விட்டது.

நடப்பாண்டில், ஆறு மாதத்துக்கு முன், கொளத்தூர் பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்த பெரும்பாலான வாழைகள், நிலத்தடி நீர் பற்றாக்குறையால் கருகி விட்டது. பலநூறு ஏக்கரில் சாகுபடி செய்த வாழைகள், தண்ணீர் இன்றி கருகிய நிலையில், கண்ணாமூச்சி, செட்டியூர் பகுதியில், கிணற்று பாசனத்தில் சாகுபடி செய்த வாழைகள் மட்டுமே கருகாமல் தப்பியுள்ளது.

கொளத்தூர் பகுதியில் சாகுபடி செய்த பெரும்பாலான வாழைகள் கருகி விட்டதால், நடப்பாண்டு கதலி ரக வாழைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலையும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

**கரும்பு டன்னுக்கு ரூ.4,000 வழங்க கோரிக்கை**

தர்மபுரி: "கரும்பு டன்னுக்கு, நான்கு ஆயிரம் ரூபாய் வழங்கிட வேண்டும்' என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்க மாநில தலைவர் சின்னசாமி வெளியிட்ட அறிக்கை:

தமிழக அரசு கரும்பு டன்னுக்கு, இரண்டு ஆயிரத்து, 350 ரூபாய் விலை அறிவித்துள்ளது. மத்திய அரசு அறிவித்த, 250 விலை உயர்வு மட்டுமே மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் உரவிலை, வெட்டுக்கூலி, ஆட்கள் கூலி என உற்பத்தி செலவு, 300 சதவீதம் உயர்ந்துள்ளது. இதன் அடிப்படையில், கரும்பு டன்னுக்கு, நான்கு ஆயிரம் விலை கோரியிருந்தோம். தேர்தல் வாக்குறுதியை நம்பிய கரும்பு விவசாயிகளுக்கு அரசின் இந்த அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு, ஆதரவான இந்த அறிவிப்பை தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். கரும்பு டன்னுக்கு, நான்கு

ஆயிரம் விலை அறிவிக்க வேண்டும். கரும்பு விவசாயிகளின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டால், கரும்பு நடவு மற்றும் பதிவு மறுப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

விவசாய மலர்

## மூங்கில் சாகுபடி



தேசிய மூங்கில் இயக்க திட்டத்தில் இந்த ஆண்டு 14 மாவட்டங்களில் மூங்கில் சாகுபடியை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. குறைந்த நீராதாரத்தில் வளரக்கூடிய மூங்கில் தற்போது சேர்வராயன் மலை, கொல்லிமலை, கல்வராயன்மலை, சத்தியமங்கலம், முதுமலை, பொள்ளாச்சி, மேற்கு தொடர்ச்சி மலை தெற்கு பகுதியில் பயிரிடப்பட்டு வருகிறது. வனத்துறை மூலம் மேற் கொள்ளப்பட்டு வந்த மூங்கில் சாகுபடி திட்டம் தற்போது தேசிய மூங்கில் இயக்கம் மூலம் தோட்டக்கலைத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டு தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், காஞ்சிபுரம், கோவை, வேலூர், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. மூங்கில் பயிரிடும் விவசாயிகளுக்கு முதல் ஆண்டில் எக்டேருக்கு 4000 ரூபாய் மானியமும், இரண்டாம் ஆண்டில் பயிரின் வளர்ச்சி சதவீதத்திற்கு ஏற்றவாறும் மானியம் வழங்கப்படும். மூங்கிலுடன் ஊடுபயிர் சாகுபடி செய்யலாம். வளர்ந்த மூங்கில்களை விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப வெட்டி விற்பனை செய்து கொள்ளலாம். மூங்கில் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் அந்தந்த மாவட்டங்களில் விவசாய கருத்தரங்குகளை நடத்தவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

**கன்று உற்பத்தி:**

பொதுவாக மூங்கில் இனப்பெருக்கம் மூன்று வழிகளில் செய்யலாம். 1. விதை மூலம், 2. கணுக்கள் வேர் அடிக்கச் செய்து, வேர்செடியாக உபயோகப்படுத்துவது, 3. திசு வளர்ப்பு முறை.

**ஏற்ற மண் வகை:**

எல்லா வகை மண்ணிலும் மூங்கில் சாகுபடி செய்யலாம். இரு மண்நிலம், செம்மண் நிலம் ஏற்றது. மோசமான மண்ணாக இருந்தால் குழி வெட்டி அதில் செம்மண் நிரப்பி, அதில் சாகுபடி செய்யலாம். நடவு இடைவெளி 13'x13'. ஒரு ஏக்கருக்கு 250 கொத்துக்கள். நடும் குழியின் அளவு: 3' x 3' x 3'. மூங்கில் நடவிற்கு குழி வெட்டுவதற்கு முன் நிலத்தின் உள்ளே நன்கு மழைநீர் இறங்குவதற்கு உழவு செய்வது அவசியம். கன்றுகளை மழைகாலத்தில் நடவு செய்ய வேண்டும். குழிக்கு 10 கிலோ தொழு உரம், 2 கிலோ மக்கிய தென்னை நார்க்கழிவு, 2 கிலோ மண் புழு உரம், 50 கிராம் வேம், 20 கிராம் அசோஸ்பைரில்லம், 20 கிராம் பாஸ்போ பாக்டீரியா, 20 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து நடவு செய்ய வேண்டும். சொட்டு நீர்பாசனம் சிறந்தது.

**ஊடுபயிர்:**
வாழை, மரவள்ளி, பயிர்வகை பயிர்கள், காய்கறிகள் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். மூங்கில் கன்றுகளை நன்கு பராமரித்தால் ஏக்கருக்கு 40 டன் மகசூல் கிடைக்கும். கன்று நட்ட முதல் ஆண்டில் 175 கிலோ யூரியா, 50 கிலோ டிஏபி, 200 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். இயற்கை உரம், மண்புழு உரம் இடவேண்டும். மூன்றாம் ஆண்டு முதல் ஏக்கருக்கு 700 கிலோ யூரியா, 200 கிலோ டிஏபி, 600 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். நீர்பாசனம் ஒரு கொத்திற்கு 100 லிட்டர் செய்ய வேண்டும்.

**அறுவடை:**
நட்ட ஆறாம் ஆண்டு முதல் முற்றிய கழிகளை வெட்டவேண்டும். அதற்கு பிறகு ஆண்டுதோறும் ஒரு முறை தொடர்ந்து மூங்கில் சாகும் வரை அறுவடை செய்யலாம். இளங்கழிகளை வெட்டக்கூடாது. கழிகளை முதல் கணுவிற்கு மேல் ஒட்ட வெட்ட வேண்டும். அடிக்கிழங்கினை எக்காரணம் கொண்டும் தோண்டக்கூடாது.

**வரவு, செலவு:**

ஆறாம் ஆண்டில் ஒரு கொத்தில் 8 கழிகளை வெட்ட முடியும். 250 து 8 = 2,000. ஒரு கழி ரூ.40/- வீதம் ரூ.80,000/- அதிக பட்சமாக செலவு ரூ.15,000/- முதல் ரூ.20,000/-. நிகர லாபம் ரூ.60,000/-.

இதைத்தவிர இளம் குருத்துக்களை பதப்படுத்தி உணவாக விற்பனை செய்யலாம். சருகுகளை மண்புழு உரமாக மாற்றி விற்பனை செய்யலாம்.

**மூங்கிலின் மருத்துவ பயன்கள்:**
மூங்கிலின் எல்லா பாகங்களிலும் மருத்துவ குணங்கள் உண்டு.

**இலக்கியத்தில் மூங்கில்:**
திருமண தம்பதிகளை வாழ்த்தும்போது "ஆல் போல் தழைத்து, அருகுபோல் வேர் ஊன்றி, மூங்கிலன்ன சுற்றம் பெருகி' என வாழ்த்தும்.

**கன்றுகள் கிடைக்கும் இடம்:**
தமிழ்நாடு வனத்துறை, முனைவர் என்.பாரதி, குரோமோர் பயோடெக், ஓசூர். 0434-426 0564.
**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

## சின்னச்சின்ன செய்திகள்

**ஐஸ்பாக்ஸ் தர்பூசணி:**
நாம் வழக்கமாக சாப்பிடும் தர்பூசனி 8 முதல் 12 கிலோ வரை எடை இருக்கும். அதன் சாகுபடி காலம் 90 நாட்கள். அதில் இனிப்புச் சுவை கொஞ்சம் குறைவு. வருடத்தில் நவம்பர் மாதத்தில் விதைப்பு ஆரம்பித்து, ஜனவரியில் சந்தைக்கு வரும். பழங்கள் ஜூன், ஜூலை வரை இருக்கும். ஐஸ்பாக்ஸ் ரகங்கள் வருடம் முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு பழத்தின் எடை ரகத்தைப் பொறுத்து 2 கிலோ முதல் 5 கிலோ வரை இருக்கும். அபரிமிதமான இனிப்புச் சுவையுடன் இருக்கும்.
இந்தப்பழம் வழக்கம்போல் தமிழகத்தைவிட கேரளாவில்தான் அதிகம் விற்பனை ஆகிறது. இதன் சாகுபடி காலம் 60 நாட்கள். பெரிய தர்பூசனி ரகங்களைவிட இவற்றிற்கு கவனிப்பும் பராமரிப்பும் அதிகம் தேவை. தாளவாடிப் பகுதியில் ஐஸ்பாக்ஸ் அதிகமானபோது துணிந்து சாகுபடி செய்ய ஆரம்பித்த சிலரில் மோகனும் ஒருவர். வருடத்திற்கு 2 முறைதான் பயிர் செய்கிறார். இதன் சாகுபடியில் விதையை நேரடியாக வயலில் விதைப்பதில்லை. நர்சரிகளில் 15-17 நாட்கள் நாற்றாக வளர்த்து, பிறகு நடவு செய்கிறார். தாளவாடி முழுக்கவே சொட்டுநீர்ப்பாசனம் மூலமாகத்தான் ஐஸ்பாக்ஸ் சாகுபடி நடைபெறுகிறது. மல்ச்சிங் ஷீட் போட்டுத்தான் தர்பூசனி சாகுபடி செய்கிறார். மகசூல் ஏக்கருக்கு சராசரியாக 20 டன். விலை ரூ.10. **மேலும் விபரங்களுக்கு:** மோகன், த/பெ.கிருஷ்ணசாமி, கவுரி குட்டைத் தோட்டம், தலமலை ரோடு, தாளவாடி, சக்தி தாலுகா, ஈரோடு. 94872 42591.

**பகவா மாதுளை:**

தமிழகத்தில் ரூ.100க்கும் குறையாமல் விற்பனையாகும் ஒரே பழம் மாதுளைதான். மகாராஷ்டிராவில் இருந்துதான் தமிழகத்திற்கு மாதுளை வந்துகொண்டுள்ளது. மாதுளையில் 2 ரகங்கள் பிரபலம். கணேஷ், பகவா. இதில் கணேஷ் நமது நாட்டு மாதுளையைப் போல் உள்ளே கடினமான விதையடன் முத்துக்கள் வெள்ளை நிறத்துடனும், "பகவா' சுத்த சிவப்பு நிறத்தில் மெல்லிய விதையுடனும் இருக்கும். ருசி, நிறம் காரணமாக பகவா குறைந்தபட்சமாக ரூ.100ல் ஆரம்பித்து ரூ.150வரை விற்பனையாகிறது.

ஈரோடு மாவட்டம் சென்னம்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் பகவா மாதுளைக் கன்றுகளை மகாராஷ்டிராவில் இருந்து கொண்டுவந்து பயிர் செய்துள்ளனர். சுமாராக 80-100 ஏக்கர் வரை இங்கு பயிராகியுள்ளது. வருடத்திற்கு இரண்டு முறை பூ எடுக்கிறது. ஆவணி, சித்திரை. செடி நடவு செய்து 18 மாதங்களுக்குள் வரும் பூக்களை உருவி விட்டுவிடுகின்றனர். செடி காய்க்க விடுவதில்லை. 18 மாதங்களுக்குப் பிறகே காய்க்க விட வேண்டுமாம். மகாராஷ்டிராவில் ஒரு மாதத்திற்கு 3 டன் மகசூல் எடுக்கின்றனர். செடியின் வயது 5 வருடத்திற்கு மேல்தான் இந்த மகசூல். **மேலும் விபரங்களுக்கு:** தமிழரசு, த/பெ.சென்னியப்பன், வேப்பமரத்தூர், கொமராயலூர் அஞ்சல், பவானி, ஈரோடு. 99428 25432.

(**தகவல்**: இன்றைய வேளாண்மை, அக்டோபர், 2012)

**மரக்கன்றுகள் வாங்க தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:**

குமார் ஹைடெக் நர்சரி, (தமிழக அரசு உரிமம் பெற்றது), 204, மேகிணறு பிரிவு, என்.சி. பாளையம் அஞ்சல், மேட்டுப் பாளையம் ரோடு, அன்னூர்-641 653. கோவை மாவட்டம். 94877 05596, 93449 25596. மலைவேம்பு ரூ.6.00; தேக்கு ரூ.5.00; குமிழ் ரூ.5.00; செஞ்சந்தனம் ரூ.10.00; சந்தனம் ரூ.15.00; வேங்கை ரூ.10.00; சவுக்கு ரூ.3.00; தைலம் ரூ.3.00; சில்வர் ஓக் ரூ.6.00; மூங்கில் ரூ.15.00; வாகை ரூ.6.00; பெருமரம் ரூ.10.00 மற்றும் ஈடா ரூ.10.00 ஆகிய நாற்றுக்கள் கிடைக்கும். பாலாஜி ஆர்டிக்கல்சர்ஸ் நர்சிரி கார்டன், எம்.எம்.நகர், காஞ்சிபுரம். 97910 77543, 90030 50778. மரக்கன்றுகள் வழங்குவதோடு மட்டுமல்லாது குழி எடுத்தல், கன்று நடுதல், டிரிப் இர்ரிகேஷன் போன்ற பணிகளையும் ஆட்களை கொண்டு சிறப்பாக செய்து தருகிறார்கள். பார்ம் ஹவுஸ் அமைப்பது, லேண்ட் ஸ்கேப்பிங் செய்வது போன்ற சேவைகளையும் வழங்கிவருகிறார்கள்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

இன்றைய வேளாண் செய்திகள்

20.11.2012 P.M

21.11.2012 A.M

## கர்நாடகா கோழிகளுக்கு தடையை நீக்கியது கேரளா



திருவனந்தபுரம்: கர்நாடகாவில் உள்ள ஹசர்கட் பகுதியில் 2 மாதங்களுக்கு முன் பறவைக் காய்ச்சல் பரவி, ஆயிரக்கணக்கான கோழிகள் இறந்தன. இதனால், கர்நாடகாவில் இருந்து இறைச்சி கோழிகள், முட்டை மற்றும் கோழித் தீவனம் ஆகியவற்றை கொண்டு வர கேரள அரசு தடை விதித்தது. மேலும், தமிழகத்தில் பறவை காய்ச்சல் இல்லாத நிலையிலும், இறைச்சி கோழி, முட்டை மற்றும் கோழி தீவனங்களை கொண்டு வர தடை விதித்தது. தமிழகத்தில் பறவை காய்ச்சல் இல்லை என கேரள முதல்வர் மற்றும் கேரள அரசு அதிகாரிகளை சந்தித்து தமிழக இறைச்சி கோழி வியாபாரிகள் கூறினர். இதையடுத்து, தமிழகத்தில் இருந்து இறைச்சி கோழி மற்றும் முட்டை கொண்டு வர விதிக்கப்பட்ட தடையை கேரள அரசு நீக்கியது. இந்நிலையில், கர்நாடகாவில் இருந்து இறைச்சி கோழி, முட்டையை கொண்டு வர விதித்திருந்த தடையை நேற்று கேரள அரசு நீக்கியது. அதே நேரம் கர்நாடகா, தமிழக கோழித் தீவனத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடரும் என அறிவித்துள்ளது.

## நடப்பாண்டில் இதுவரை 9.84 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி



புதுடெல்லி : நடப்பாண்டில் இது வரை 9.84 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சர்க்கரை ஆலைகள் சங்கம் (இஸ்மா) தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக, இஸ்மா வெளியிட்ட அறிக்கை: 2012,13ம் ஆண்டில் நவம்பர் 15ம் தேதி வரை 9.84 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலத்தில் 7.76 டன்னாக இருந்தது. கர்நாடகா மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகரித்ததால் 27 சதவீதம் அதிக சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 15ம் தேதி கணக்கெடுப்பின்படி நாடு முழுவதும் 178 ஆலைகளில் கரும்பு அரவை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 215 ஆலைகளில் அரவை நடைபெற்றது. உ.பி.யில் 43 ஆலைகளில் 3 ஆலைகளில் மட்டுமே அரவை தொடங்கியுள்ளது. மகாராஷ்டிராவில் மொத்தம் உள்ள 95 ஆலைகளில் 93ல் அரவை தொடங்கி விட்டது. கர்நாடகாவில் 49 ஆலைகளில் (கடந்த ஆண்டு 48) கரும்பு அரவை நடைபெறுகிறது.

இந்த மாநிலத்தில் மட்டும் இதுவரை 4.2 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகியுள்ளது. இது கடந்த ஆண்டு 2.37 லட்சம் டன்னாக இருந்தது. கடந்த 2011,12ல் 2.6 கோடி டன்னாக இருந்த ஒட்டுமொத்த சர்க்கரை உற்பத்தி, நடப்பாண் டில்(2012,13) 8 சதவீதம் குறைந்து 2.4 கோடி டன்னாக இருக்கும். மழை குறைவாக இருந்ததால் கரும்பு விளைச்சல் பரப்பளவு குறைந்ததே இதற்கு முக்கிய காரணமாகும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

20.11.2012 P.M

21.11.2012 A.M

20th nov 2012 P.M

**விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்**

விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீடுதிட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் இளசெழியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழி யன் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்து இருப்பதாவது:–

வேளாண் காப்பீடு

நடப்பு சம்பா மற்றும் தாளடி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிதி உதவி வழங்க தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் அறிவிப்பு வெளி யிட்டுள்ளது. காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும், குத்தகைக்கு பயிரிடுவோர் உட்பட இத்திட்டத்தில் சேர லாம். வங்கிகளின் பயிர்கடன் பெறுபவர்கள் கட்டாய மாகவும், பயிர் கடன் பெறாத வர்கள் விருப்பத்தின் அடிப் படையிலும் இத்திட்டத்தில் சேரலாம். உத்தரவாத மகசூல் மதிப்பு அடிப்படையிலும் விவசாயிகள் விரும்பினால் உத்தரவாத மகசூல் மதிப்பை விட கூடுதலாக 150 சதவீத மதிப்பு வரை கூடுதல் பிரிமியம் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

50 சதவீத மானியம்

இத்திட்டத்தில் வரையறுக் கப்பட்ட பகுதி பிர்கா அளவில் உள்ளது. பிர்கா அளவில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் மகசூல் உத்தரவாத மகசூலின் அளவை காட்டிலும் குறைவாக இருந்தால் அப் பயிரை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் இழப்பு ஏற்பட்டதாக கருதப் பட்டு

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவர். இத்திட்டத்தை செயல்படுத்த இந்திய காப் பீட்டு நிறுவனத்தை மத்திய அரசு நிறுவியுள்ளது.

பிரிமியம் செலுத்தும் விவ சாயிகளுக்கு 50 சதவீத மானியம் அரசு வழங்குகிறது. கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டும் 55 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. உத்தரவாத மகசூல் மதிப்பு ரூ.8,692 எனவும், இதற்கான பிரிமியம் 2 சதவீதம் எனவும், பிரிமிய தொகை ரூ.174 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு கடன்பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.78, கடன் பெற்ற மற்றும் இதர விவசாயிகள் ரூ.87 பிரிமியம் செலுத்த வேண்டும்.

கூடுதல் காப்பீடு

உத்தரவாத மகசூல் மதிப்பை விட கூடுதலாக பிரிமியம் கட்ட விரும்பினால் கூடுதல் காப்பீடு தொகை ரூ.7,604, இதற்கு பிரிமியம் 13.60 சதவீதம். இதற்கான பிரிமிய தொகை ரூ.1034. கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ.465, கடன் பெற்ற மற்றும் இதர விவசாயிகள் ரூ.517–ம் செலுத்த வேண்டும். உத்தரவாத மகசூல் மதிப்பு மற்றும் கூடுதல் மதிப்பு தொகை ரூ.16 ஆயிரத்து 296, கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ.544 கடன்பெற்ற மற்றும் இதர விவசாயிகள் ரூ.604 செலுத்தி இத்திட்டத்தில் சேரலாம். கடன் பெறாத விவசாயிகள் இத்திட்டத்தில் சேர கடைசி தேதி 15–12–2012 ஆகும். கடன் பெற்ற விவசாயிகளுக்கான கடைசி தேதி 31–12–2012. குறிப்பிட்ட இறுதி நாளுக்கு முன்னரே எதிர்பாராத விதமாக பாதிப்பு ஏற்பட்டால் பாதிப்பு ஏற்பட்ட நாளே இறுதி நாளாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதால் கடைசி நாள் வரை காத்திராமல் உடனே பயிர் காப்பீடு செய்து கடைசி நாளில் ஏற்படும் நெருக்கடியை தவிர்த்திடுங்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

## பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி –அரக்கன்கோட்டை வாய்க்காலுக்கு தண்ணீர் திறப் பு

பவானிசாகர்

பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

வாய்க்கால்கள்

பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீர் கொடிவேரி அணைக்கு வருகிறது. பின்னர் அங்கிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனத்திற்கு திறந்து விடப்படுகிறது. இந்த வாய்க்கால்கள் மூலம் 24 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வாழை, மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. இதற்காக கடந்த ஏப்ரல் மாதம் 30–ந் தேதி தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதைத்தொடர்ந்து, பாசன பகுதிகளில் முதல்போக நெல் அறுவடை முடிவடைந்ததை தொடர்ந்து கடந்த செப்டம்பர் மாதம் 30–ந் தேதி வாய்க்கால்களில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டது. அக்டோபர் மாதம் 2–ம் போக பாசனத்துக்காக வாய்க்கால்களில் மீண்டும் தண்ணீர் திறப்பது வழக்கம்.

<u>விவசாயிகள் கோரிக்கை</u>

தற்போது, பவானிசாகர் அணையில் தண்ணீர் இருப்பு குறைவாக உள்ளதால், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால், தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள வாழை, மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காயும் சூழ்நிலை ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து, தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசன பகுதியில் காயும் நிலையில் உள்ள வாழை, மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களுக்கு உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இதை ஏற்றுக்கொண்ட தமிழக அரசு பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டது. அதன்படி, நேற்றுக்காலை 8 மணிக்கு பவானிசாகர் அணையில் இருந்து வினாடிக்கு 700 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் மாலை 6 மணியளவில் கொடிவேரி அணையை வந்தடைந்தது. அதைத்தொடர்ந்து, கொடிவேரி அணையில் இருந்து மதகுகளின் வழியாக தடப்பள்ளி வாய்க்காலுக்கு வினாடிக்கு 450 கனஅடி தண்ணீரும், அரக்கன்கோட்டை வாய்க்காலுக்கு வினாடிக்கு 250 கனஅடி தண்ணீரையும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் திறந்து விட்டனர்.